**ஜூன் - 17**

# TNPSC துளிகள்

- சர்வதேச வெளிறல் தன்மை தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 13 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
    - இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பிரகாசித்தலை ஏற்படுத்துதல்" என்பதாகும்.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு மற்றும் யுனிசெப் ஆகியவை குழந்தைத் தொழிலாளர் குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளன.
    - இந்த அறிக்கையானது "கோவிட் - 19 மற்றும் குழந்தைத் தொழிலாளர் : நெருக்கடிக் காலம், செயல்படுவதற்கான நேரம்" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப் பட்டுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது "Germiklean" என்ற ஒரு கிருமிநாசினி அறையை உருவாக்கியுள்ளது.
    - இது பாதுகாப்புப் படை மற்றும் காவல்துறை அதிகாரிகளின் சீருடைகள் மேல் கிருமிநாசினி பயன்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் ஒரு கிருமிநாசினி அறையாகும்.
- கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் மிக அதிகமாக அமேசான் பகுதியில் காடுகளின் அழிப்பானது நடைபெற்றுள்ளதாக தேசிய விண்வெளி ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.
    - 2019 ஆம் ஆண்டில் அந்நாட்டின் அதிபராக ஜெய்ர் போல்சனரோ பதவியேற்ற பிறகு இந்தப் பகுதியில் காடுகளின் அழிப்பானது அதிகரித்துள்ளது.
- நியூசிலாந்து, பிஜி, மோன்டிங்க்ரோ, தான்சானியா, வாடிகன், செசல்ஸ், பப்புவா நியூ கினியா, திமோர்-லெஸ்டி, செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் போன்ற நாடுகள் தங்களை கோவிட் - 19 நோய்த் தொற்றற்ற நாடுகளாக அறிவித்துள்ளன.
- பஞ்சாப் மாநில அரசானது கோவிட் - 19 நோய்த் தொற்றை ஒழிப்பதற்கு வேண்டி வீடுகளுக்கேச் சென்று ஆய்வை மேற்கொள்வதற்காக "கர் கர் நிகரானி" என்ற ஒரு கைபேசிச் செயலியைத் தொடங்கியுள்ளது.
- ஐஐடி - கரக்பூரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பொது இடங்களில் சமூக விலகலைக் கண்காணிப்பதற்காக செயற்கை நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்ட இணைய வழியிலான ஒரு நேரடிக் கண்காணிப்பு முறையை உருவாக்கியுள்ளனர்.
- சமீபத்தில் மிகவும் புகழ்பெற்ற முதுபெரும் உருதுக் கவிஞரான ஆனந்த் மோகன் சூட்சி "குல்சர்" தெஹல்வி என்பவர் காலமானார்.
    - இந்திய அரசினால் உருது மொழியில் வெளியிடப்படும் ஒரே அறிவியல்

பத்திரிக்கையான "சயின்ஸ் கீ துனியா" என்பதின் ஆசிரியர் குல்சர் ஆவார்.

- சமீபத்தில் ஜம்மு காஷ்மீர் அரசானது வளர்ப்புப் பறவைகள் (கோழி) கொள்கை, 2020 என்ற கொள்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- சிலி மற்றும் அர்ஜென்டினாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பட்டகோனியப் பகுதியில் "மகலன்டோன் பைகாஷ்கென்க்" என்று அழைக்கப்படும் ஒரு உயிரினத்தின் பற்களைக் கண்டறிந்துள்ளனர்.
    - இது 74 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பாலூட்டி வகையைச் சேர்ந்ததாகும்.

# தேசியச் செய்திகள்

## iFLOWS

- iFLOWS என்பது வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் வெள்ள எச்சரிக்கையை வழங்கும் ஒரு அமைப்பாகும்.
- இது மும்பையில் தொடங்கப் பட்டுள்ளது.
- iFLOWS என்பது  ஒருங்கிணைந்த வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பாகும்.




## பி.கே. மொகந்தி குழு

- இந்திய ரிசர்வ் வங்கியானது தனியார் துறை வங்கிகளின் உரிமை குறித்த வழிகாட்டுதல்களை மறு ஆய்வு செய்வதற்காக உள்ளகப் பணிக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவானது இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநரான P.K. மொகந்தி அவர்களால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.
- இது கூட்டுறவு முறைமையின் மூலம் அல்லாத நிதியியல் சொத்துக்களை வைத்துள்ள நிறுவனம் மூலமாக துணை நிதியியல் நிறுவனங்களை வைத்திருப்பதற்கான விதிமுறைகளை ஆய்வு செய்ய இருக்கின்றது.

## DDMA

- தில்லி துணை நிலை ஆளுநரான அனில் பைஜால் தில்லி பேரிடர் மேலாண்மை

ஆணையத்திற்கு (DDMA - Delhi Disaster Management Authority) அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக ஒரு வல்லுநர் ஆலோசகக் குழுவை அமைத்துள்ளார்.

- பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 என்ற சட்டமானது தேசிய, மாநில, மாவட்ட அளவில் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் விரிவான சட்டப்பூர்வச் செயல் திட்டங்களை வழங்குகின்றது.
- மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையமானது மாநில முதலமைச்சரால் தலைமை தாங்கப் படுகின்றது.
- ஆனால் தில்லியைப் பொறுத்தவரை, தில்லி துணைநிலை ஆளுநர் தில்லி பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் ஆவார். தில்லியின் முதலமைச்சர் இந்த ஆணையத்தின் துணைத் தலைவர் ஆவார்.

# சர்வதேசச் செய்திகள்

## கத்தி சல்லீவன்

- சமீபத்தில் அமெரிக்க விண்வெளி வீராங்கனை மற்றும் கடல் ஆய்வு நிபுணரான கத்தி சல்லீவன் என்பவர் பெருங்கடலின் மிகவும் ஆழமான பகுதியான சேலஞ்சர் முனை ஆழப் பகுதியை அடைந்தார்.
- இதன் மூலம் புவியில் மிக ஆழமான பகுதியை அடைந்த முதலாவது பெண்மணியாக இவர் உருவெடுத்துள்ளார்.
- 1984 ஆம் ஆண்டில், இவர் தனது முதலாவது விண்வெளி நடைப் பயணத்தை மேற்கொண்டார். இவர் விண்வெளியில் நடந்த முதலாவது பெண்மணியாக அப்போது உருவெடுத்துள்ளார்.
- தற்பொழுது சேலஞ்சர் முனை ஆழப் பகுதியை அடைந்ததன் மூலம், விண்வெளியில் நடந்த முதலாவது பெண்மணி மற்றும் புவியில் ஆழமான பகுதியை அடைந்த முதலாவது பெண்மணி என்ற இரண்டு சாதனையையும் இவர் படைத்துள்ளார்.
- பெருங்கடலில் மிகவும் ஆழமான பகுதியை அடைந்த முதலாவது பெண்மணியாகவும் இவர் உருவெடுத்துள்ளார்.
- சேலஞ்சர் முனை ஆழப் பகுதியானது மரியானா ஆழியின் தெற்குப் பகுதியில் மேற்கு பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது.
- இது மைக்ரோனேசியக் கூட்டாட்சி நாடுகளின் பெருங்கடல் பகுதியில் அமைந்து உள்ளது.



# பொருளாதாரச் செய்திகள்

## நாடு தழுவிய அனைவருக்குமான அடிப்படை வருமானம் (UBI)

- தேசிய மனித உரிமைகள் ஆணையமானது முன்பு பரிந்துரைக்கப்பட்ட நாடு தழுவிய அனைவருக்குமான அடிப்படை வருமானத்தின் (UBI - Universal basic income) செயல்படுத்துதலானது மத்திய அரசின் "ஆய்வு மற்றும் ஆலோசனையின்" கீழ் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்திடம் கூறியுள்ளது.
- இது குடிமக்களின் வருமானம், வளம், வேலைவாய்ப்பின் நிலை ஆகியவற்றைப் பொறுத்து அல்லாமல் நாடு/இதரப் புவியியல் பகுதி/மாநிலத்தில் உள்ள குடிமக்கள் என்ற அடிப்படையில் நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் நிதியுதவி வழங்கும் ஒரு திட்டமாகும்.
- 2016-17 ஆம் ஆண்டின் இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கையானது வறுமையை ஒழிக்கும் ஒரு முயற்சியாகவும் பல்வேறு சமூக நலத்திட்டங்களுக்கு மாற்றாகவும் வேண்டி UBIயின் கருத்தாக்கம் குறித்து கூறியுள்ளது.
- UBIயின் பின்னணியில் இருக்கும் முக்கிய நோக்கம் குடிமக்களிடையே சமத்துவத்தை அதிகரிப்பதும் வறுமையை ஒழிப்பது (அ) குறைப்பதாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## லோனார் ஏரி

- பல்வேறு ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழுவானது மகாராஷ்டிராவின் லோனார் ஏரியானது ஏன் இளஞ்சிவப்பு நிறமாக மாறியுள்ளது என்பது குறித்து ஆய்வு செய்ய இருக்கின்றது.
- இந்த நீர்நிலையில் உள்ள உப்புத் தன்மை மற்றும் பாசிகளின் இருப்பு ஆகியவை இதற்குக் காரணம் என்று சில வல்லுநர்கள் கூறுகின்றனர்.
- லோனார் பள்ள ஏரியானது 1823 ஆம் ஆண்டில் ஆங்கிலேய அதிகாரியான CJE அலெக்சாந்தர் என்பவரால் ஒரு தனித்துவப் புவியியல் இடமாக அடையாளம்

காணப் பட்டுள்ளது.

- இது மகாராஷ்டிராவில் விண்கல் வீழ்ந்ததனால் உருவாக்கப்பட்ட மிகப் பழமையான ஒரு வட்டவடிவ ஏரியாகும்.
- லோனார் பள்ளமானது 1979 ஆம் ஆண்டில் ஒரு புவியியல் பாரம்பரியத் தளமாக உருவெடுத்துள்ளது.
- இது 50,000 ஆண்டுகளுக்கு முன்பு உருவான ஏறக்குறைய ஒரு மிக இளமையான புவியியல் பகுதியாகும்.
- லோனார் ஏரியானது இந்தியாவில் உள்ள ஒரு மிகப்பெரிய பசால்ட் (பாறைவகை) உருவாக்கமான தக்காண மடிப்புப் பகுதியில் காணப்படும் வேற்றுக் கிரகப் பொருள் மூலமான தாக்கத்தினால் உருவான பள்ளத்தில் அமைந்துள்ளது.



# முக்கிய தினங்கள்

## உலக இரத்த தான தினம் - ஜூன் 14

- இது ஏபிஓ என்ற ரத்தக் குழு வகை உள்ளிட்ட பல்வேறு இரத்தக் குழுக்களைக் கண்டுபிடித்தவரான கார்ல் லேண்ட்ஸ்டெய்னர் என்பவரது பிறந்த நாளில் அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தக் கண்டுபிடிப்பானது இவரை 1930 ஆம் ஆண்டில் நோபல் பரிசினை வெல்ல வைத்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "இரத்தத்தைப் பாதுகாத்தல் உயிரைப் பாதுகாத்தல்" என்பதாகும். இதன் முழக்கம் "இரத்தத்தைத் தானம் செய்து, உலகை ஆரோக்கியமான இடமாக்கு" என்பதாகும்.




## உலக முதியோர் கொடுமைப்படுத்தல் விழிப்புணர்வு தினம் - ஜூன் 15

- இது ஜூன் 15 அன்று ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “அவர்களின் குரலை உயர்த்துதல்” என்பதாகும்.
- இந்த ஆண்டு உலக சுகாதார நிறுவனமானது “கோவிட் - 19னின் போதும் அதற்குப் பிறகும் முதியோர்களைப் பாதுகாத்தல்” என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.




## உலகக் காற்று தினம் - ஜூன் 15

- இது 2009 ஆம் ஆண்டில் ஐரோப்பியக் காற்று ஆற்றல் மன்றம் (EWEA - European Wind Energy Association) மற்றும் உலகளாவியக் காற்று ஆற்றல் ஆணையம் (GWEC - Global Wind Energy Council) ஆகியவற்றினால் ஏற்படுத்தப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★